## நீட் தேர்வு, மும்மொழிக்கொள்கை, புதிய கல்விக்கொள்கை – என

# ஒன்றிய அரசின் சூழ்ச்சிகளை மாணவர்கள் புரிந்துகொண்டால் இன எதிரிகளால் நம்மை வெற்றிகொள்ள முடியாது!

## சென்னை, நந்தனம் அரசு கலைக்கல்லூரி விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,ஏப்.22-

**சென்னை, நந்தனம் அரசு கலைக்கல்லூரியில், முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி, அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.4.80 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள `கலைஞர் கலையரங்கத்தை' நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.**

அப்போது அவர் 1986-இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நந்தனம் அரசு கலைக்கல்லூரி மாணவர் பேரவையைத் தொடங்கி வைத்தார். இப்போது `புதுமைப்பெண்', `தமிழ்ப் புதல்வன்', `நான் முதல்வன்' என நம் திராவிட மாடல் அரசு, ஏற்படுத்தி வரும், கல்விப்புரட்சியின் வெற்றி ஒவ்வொரு மாணவரின் முகத்திலும் தெரிகிறது. இத்திட்டங்களைச் சிறப்புற பயன்படுத்தி, மாணவர்கள் வாழ்வில் உயரங்களைத் தொட வேண்டுமென வாழ்த்திப்பேசினார்.

நந்தனம் அரசு கலைக்கல்லூரியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களின் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 4 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இன்றைக்கு நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை உங்கள் முன்னிலையில் திறந்து வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். இந்த வாய்ப்பை அளித்த அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்ப்பற்றும் இனப்பற்றும்!

நான் லயோலா கல்லூரியில் பி.காம் படித்துக் கொண்டிருக்கும்போது, எனது கல்லூரிக்குச் சென்றதைவிட, அதிகமாக சென்றது இந்த நந்தனம் கலைக் கல்லூரிக்குதான். படிப்பதற்காக இல்லை, விளையாடுவதற்காக வருவேன். இங்கிருக்கின்ற விளையாட்டு அரங்கத்தில் நானும் எனது நண்பர்களும், ஏன் நம் முதலமைச்சர் அவர்கள்கூட இந்த மைதானத்திற்கு வந்து, காலையில் உடல் பயிற்சியில் ஈடுபடுவார். எங்களோடு சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவார். அப்படிப்பட்ட அதே கல்லூரிக்கு இன்றைக்கு என்னை வரவழைத்து இவ்வளவு சிறப்பான வாய்ப்பு அளித்த மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

1969-ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நந்தவனம் ஆடவர் அரசு கலைக் கல்லூரியைத் திறந்து வைத்தார்கள். இன்றைக்கு கலைஞரின் பெயரிலான இந்தக் கலையரங்கத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். சென்னை எப்படி தமிழ்நாட்டின் அடையாளமோ, அதேபோல் சென்னையின் மிகமிக முக்கியமான அடையாளமாக நந்தனம் அரசு கலைக்கல்லூரி புகழ்பெற்று இருக்கிறது. நந்தனம் அரசு கல்லூரி மாணவர்களுக்கு அடையாளம் என்னவென்றால், தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் அதிகம் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல முறை பாராட்டி இருக்கிறார். இந்தக் கல்லூரியில் படித்த பலர் இன்றைக்கு அரசு அதிகாரிகளாக, காவல் துறை அதிகாரிகளாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, மக்கள் பிரதிநிதிகளாக சிறப்பாக திகழ்ந்து வருகிறார்கள்.

### கலையரங்கம் மிக முக்கியம்!

இந்தக் கல்லூரியில் படித்த அண்ணன் தாயகம் கவி அவர்கள், இந்த மேடையில் சட்டமன்ற உறுப்பினராக உட்கார்ந்து இருக்கிறார். அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் என்னுடன் பேசும் போது, `இது பெரிய ரெக்கார்ட் பிரேக்' என்று சொன்னார். மிகப்பெரிய ஒரு வரலாற்றுச் சாதனை என்று சொன்னார். நான்கூட இந்த அரங்கத்தைத்தான் மிகப் பெருமையாகச் சொல்கிறார் என்று நினைத்தேன். அப்போது அவர் சொன்னார், மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் இந்த அரங்கம் முழுக்க நிரம்பி இருக்கிறார்களே இது ஒரு மிகப்பெரிய வரலாற்றுச் சாதனை என்று சொன்னார்.

கல்லூரிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வரங்கங்கள் எவ்வளவு முக்கியமோ, அதைவிட இது மாதிரியான கலையரங்கம் மிக மிக முக்கியம். நாமெல்லாம் கல்லூரியில் படிப்பை முடித்துவிட்டுச் செல்லும்போதும் ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாத நினைவுகள் இருக்கும். அதுபோன்ற பல நீங்காத நினைவுகளை இந்தக் கலையரங்கம் நிச்சயம் உங்களுக்கு தரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

படித்து முடித்த பிறகு, முன்னாள் மாணவர்களாக பல ஆண்டுகள் கழித்து இந்தக் கல்லூரிக்கு வரும்பொழுது உங்கள் வகுப்பறைக்குள் உட்கார உரிமை கிடையாது. அனுமதிக்க மாட்டார்கள். ஆனால், இதுபோன்ற கலைநிகழ்ச்சிகள் என்று வரும்பொழுது இந்த கலையரங்கத்திற்குள் வந்து அமரலாம். அதேபோல அண்ணன் மா.சு அவர்கள் உங்களுக்கு வகுப்பறை கட்டிக் கொடுத்திருந்தால்கூட உடனே மறந்து விடுவீர்கள். ஆனால், இந்தக் கலையரங்கத்தைக் கட்டிக் கொடுத்த காரணத்தினால் எந்த காலத்திலும் அண்ணன் மா.சு அவர்களை நீங்கள் மறக்க முடியாது. ஏனென்றால், வகுப்பறைகள் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மட்டுமே சொந்தம். ஆனால், இந்த கலையரங்கம்தான் முன்னாள் மாணவர்கள், இன்றைய மாணவர்கள், நாளைய மாணவர்கள் என அத்தனை பேருக்கும் சொந்தமானது.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.4.2025) நந்தனம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் 1,000 இருக்கைகள் வசதியுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் கலையரங்கத்தை திறந்து வைத்து உரையாற்றினார். அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டல குழுத்தலைவர் இரா.துரைராஜ், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, நந்தனம் அரசு கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் சி.ஜோதி வெங்கடேசுவரன், மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.

### போராடிய முதல் மாணவர்கள்!

1986-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, இதே நந்தனம் அரசு கலை கல்லூரி மாணவர்கள்தான் வீதிக்கு வந்து போராடிய முதல் மாணவர்கள் என்ற பெருமை இந்த கல்லூரிக்கு உண்டு. அந்த நேரம் கல்லூரியின் மாணவர் பேரவைத் தலைவராக அண்ணன் தாயகம் கவி அவர்கள்தான் போட்டியிடுகிறார். அப்பொழுது மாணவர்கள் எல்லாம் அவரிடம் ஒரு கோரிக்கை வைக்கிறார்கள். ``நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கிறோம். உங்களை ஸ்டுடென்ட் யூனியன் தேர்தலில் வெற்றி பெற வைக்கிறோம். ஆனால், வெற்றிபெற்ற பிறகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை இந்த கல்லூரிக்கு அழைத்து வந்து நீங்கள் பேச வைக்க வேண்டும்” என்று அவரிடம் கோரிக்கை வைக்கிறார்கள்.

அந்த மாணவர்களின் கோரிக்கையை அவரும் ஏற்கிறார். அண்ணன் தாயகம் கவி அவர்களை, மாணவர்கள் வெற்றிபெறச் செய்கிறார்கள். ஆனால், அன்றைக்கு நம் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியில் இல்லை. எதிர்க்கட்சியில் இருக்கிறோம். எதிர்கட்சியாக இருப்பதாலும், இந்தித் திணிப்புக்கு எதிராக சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தை அறிவித்ததாலும் கலைஞர் அவர்களை கல்லூரி நிர்வாகம் அனுமதிக்கவில்லை. கல்லூரி முதல்வர் அப்போது தயங்கினார். கல்லூரி மாணவர்கள் அப்போது உள்ளிருப்புப் போராட்டம் செய்தார்கள். போராட்டம் செய்வதற்கு நந்தனம் அரசுக் கலைக்கல்லூரி மாணவர்களுக்கு நாம் சொல்லித் தர தேவையில்லை.

### பேசுவதற்கு அனுமதி!

இன்னும் சொல்லப்போனால் கல்லூரி முதல்வரின் அறையையே அன்றைக்கு பூட்டினார்கள். இதையெல்லாம் பெருமையாகச் சொல்லவில்லை. எந்த அளவிற்கு கல்லூரி மாணவர்கள் கலைஞரை இந்த கல்லூரிக்குள் அழைத்து வர வேண்டும் என்று போராட்டம் செய்தார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக சொன்னேன்.

மாணவர்களின் போராட்டத்தைப் பார்த்து அன்றைய அரசு இறங்கி வந்து கலைஞர் அவர்களை கல்லூரிக்குள் பேசுவதற்கு அனுமதித்தார்கள். அன்றைக்கு இந்த அரங்கம் கிடையாது. மைதானத்தில்தான் மேடையை அமைத்துப் பேசினார்கள்.

கலைஞர் பேசத் தொடங்கும் பொழுது, மழை தூறல் ஆரம்பித்துவிட்டது. இங்கு இருக்கின்ற ஒரு சிறிய அரங்கத்தில், தற்காலிக மேடை அமைத்து அங்கு பேசுவதற்கு கலைஞர் வந்தார். அந்த அரங்கத்தில் இருந்து நந்தனம் கலைக்கல்லூரி மாணவர் பேரவையைத் தொடங்கி வைத்து, கலைஞர் அவர்கள் இந்தித் திணிப்புக்கு எதிராக உணர்ச்சி பொங்க பேசினார். கலைஞர் அவர்கள் பேசுவதற்கு, இங்கு அன்றைக்கு கலையரங்கம் இல்லை. இன்றைக்கு கலைஞர் பெயரிலேயே முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் ஒரு கலையரங்கத்தை உருவாக்கி கொடுத்திருக்கிறார்.

இந்தித் திணிப்புக்கு எதிராக கலைஞர் அவர்கள் அன்றைக்கு இந்தக் கல்லூரியில் பேசிய கருத்துகள், அது இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது. ``இந்த சிறிய அறையில், நிறைய மாணவர்கள் இருக்கிறீர்கள். உங்களை எல்லாம் இந்த அறையில் வைத்துத் திணித்து இருக்கிறார்கள். திணித்துக் கொண்டு நிற்கிறீர்கள். அதனால் காற்று உள்ளே வர முடியவில்லை. `இந்தத் திணிப்பு' நான் பேசி முடிந்தவுடன் அரை மணி நேரத்தில் கலைந்துவிடும். ஆனால், இந்தித் திணிப்பு எப்போது விலகும் என்று அந்த மேடையில் கலைஞர் அவர்கள் கேட்டார்.

### அடிப்படையே தமிழ்தான்!

கலைஞர் அன்றைக்குக் கேட்ட அந்த கேள்வி, இன்றைக்கும் நமக்குப் பொருத்தமாக இருக்கிறது. அதற்கான விடையை நம் முதலமைச்சரின் காலத்தில் நிச்சயம் தமிழ்நாட்டு மாணவர்கள் நீங்கள் வென்று எடுப்பீர்கள். அதற்கான விடையை நிச்சயம் நாம் பெறுவோம் என்று கூறிக் கொள்கிறேன். தமிழ்நாடு என்பதற்கு அடிப்படையே தமிழ்தான். அந்த தமிழுக்கு இப்போது மிகப்பெரிய ஆபத்தை பல்வேறு வழிகளில் ஏற்படுத்த முயன்று இருக்கிறார்கள். மும்மொழி கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். நீட் தேர்வைக் கொண்டு வந்தார்கள். இந்தித் திணிப்பைக் கொண்டு வருகிறார்கள். புதிய கல்விக்கொள்கை என்று வெவ்வேறு பெயர்களில் வந்தாலும் ஒட்டுமொத்தமாக இதன் நோக்கம் தமிழ்நாட்டில் எப்படியாவது இந்தித் திணிப்பை நுழைத்துவிட வேண்டும் என்பதுதான்.

இதற்கான வாதங்களை நிறைய பேர் சொல்வார்கள். உண்மையைப் போலவே சிலர் பேசுவார்கள். மாணவச் செல்வங்களாகிய நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உண்மைகளை எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் தமிழ் உணர்வு உயிர்ப்போடு இருப்பதற்கு காரணம் 1965-இல் ஏற்பட்ட மாணவர்களின் எழுச்சிதான் முக்கியக் காரணம்.

> **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நந்தனம் அரசு கலைக்கல்லூரி மாணவர் பேரவையைத் தொடங்கி வைத்தார். இப்போது ‘புதுமைப்பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’, ‘நான் முதல்வன்’ என நம் திராவிட மாடல் அரசு, ஏற்படுத்தி வரும், கல்விப்புரட்சியின் வெற்றி ஒவ்வொரு மாணவரின் முகத்திலும் தெரிகிறது. இத்திட்டங்களைச் சிறப்புற பயன்படுத்தி, மாணவர்கள் வாழ்வில் உயரங்களைத் தொட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.**

அந்த மாணவர்களின் போராட்டம்தான் இந்தித் திணிப்பை தமிழ்நாட்டிற்குள் வர முடியாமல் தடுத்தது.

### தமிழ்மொழி போராட்டம்!

உங்களின் சீனியர்கள் நடத்திய தமிழ்மொழி போராட்டம்தான் தமிழ் பண்பாட்டை காத்து நம்மை எல்லாம் பாதுகாத்தது. உங்களுக்கு முன்பு போராடிய சீனியர்களுக்கெல்லாம் கிட்டத்தட்ட 70 லிருந்து 80 வயது இருக்கும். அவர்கள் அப்போது எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் போராடினார்கள்.

இன்றைக்கு அவர்களிடம் சென்று கேட்டீர்கள் என்றால், உங்களின் சீனியர்களுக்கு கொடுக்கக் கூடிய ஒரே பரிசு என்ன தெரியுமா? எங்களின் காலத்திலும் நாங்களும் இந்தித் திணிப்பை ஏற்றுக் கொள்ளமாட்டோம், அதில் என்றென்றும் உறுதியாக இருப்போம் என்ற வாக்குறுதியைதான் அவர்கள் விரும்புவார்கள்.

பொதுவாக தந்தை பெரியாராக இருந்தாலும், பேரறிஞர் அண்ணாவாக இருந்தாலும், முத்தமிழறிஞர் கலைஞராக இருந்தாலும் மாணவர்கள் போராட்டத்தில் இறங்குவதை அவர்கள் என்றைக்கும் விரும்பியதே இல்லை. காரணம் மாணவர்கள் படிப்பில்தான் கவனம் செலுத்த வேண்டும். போராட்டம் நடத்திக் கொண்டிருந்தால், படிப்பில் பாதி நேரம் சென்று விடும் என்ற அந்த ஒரே எண்ணம்தான். ஆனால், இன்றைக்கு நம் கல்விக்கே ஒரு மிகப்பெரிய ஆபத்து ஏற்படுத்தும் வகையில், நீட் தேர்வு, மும்மொழிக் கொள்கை, புதிய கல்விக்கொள்கை என பல தொந்தரவுகளை ஒன்றிய அரசு நம் மாணவர்களுக்கு கொடுத்து கொண்டு இருக்கிறது. இந்த சூழ்ச்சிகளையும், ஆபத்துகளையும் மாணவர்களாகிய நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் இதனைச் சரியாகப் புரிந்துகொண்டால் என்றென்றைக்கும் நம் இன எதிரிகளால் நம்மை வெற்றிகொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். 100 வருடங்களுக்கு முன்பு ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கி படிப்பதற்கு விடுதி வசதிகூட கிடையாது. அப்போது டாக்டர் நடேசனார் அவர்கள் நீதிக் கட்சி தலைவராக இருந்தார். அவர்தான் ‘திராவிடன் இல்லம்’ என்ற மாணவர் விடுதியை திருவல்லிக்கேணியில் 1916-ஆம் ஆண்டில் தொடங்கினார். இன்று நீதிக் கட்சியின் மறு உருவமாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, திராவிட மாடல் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

### கல்லூரி மாணவர் நவீன விடுதி!

அன்றைக்கு நம் மாணவர்களுக்கு விடுதி வசதி கிடையாது. ஆனால், இன்றைக்கு இந்த கல்லூரிக்கு பக்கத்தில் இருக்கின்ற எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் நவீன விடுதி கட்டடத்தை சென்ற வாரம் நம் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்காக திறந்து வைத்திருக்கிறார்கள். இதுதான் திராவிட இயக்கத்தின் வெற்றி. இதுதான் திராவிட மாடல் அரசின் வெற்றி. திராவிட இயக்கம் எதையெல்லாம் தொட்டதோ அதில் எல்லாம் வெற்றி பெற்று இருக்கிறது.

இதற்கெல்லாம் என்ன காரணம்? திராவிட இயக்கத்தின் கொள்கைகள் என்பது மனித உரிமை, சமூகநீதி, பெண்ணுரிமைக் கொள்கைகள், பகுத்தறிவு இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அதனால்தான் இந்தக் கொள்கைகள் நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இன்றைக்கு நம் மாணவர்களின் கல்விக்கான நிறைய திட்டங்களை, நம் திராவிட மாடல் நிறைவேற்றி வருகிறது. இங்கு நம் உயர்கல்வித்துறை அமைச்சர் பேசும்பொழுது சொன்னார். `தமிழ்ப் புதல்வன்', `புதுமைப்பெண்', `நான் முதல்வன்' போன்ற பல திட்டங்கள் மாணவர்கள் உயர் கல்வியில் படிப்பதற்குப் பேருதவியாக இருக்கின்றன.

### அரசு உதவித்தொகை!

வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் மேற்படிப்பு ஆராய்ச்சி, கல்வி பயில நம் அரசு உதவித்தொகையைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள், கல்வியில் என்றென்றும் சிறந்து விளங்குபவர்கள். நிச்சயம் அது தொடரும் என்று நம்பிக்கை இருக்கிறது.

மிகப்பெரிய அறிவாளிகளாக, தொழில் அதிபர்களாக சமூகத்தில் இருக்கின்ற அனைத்து மனிதர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக நீங்கள் உங்களின் வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தமிழுக்கு எதிரான சூழ்ச்சிகளை மாணவச் செல்வங்கள் நீங்கள் வீழ்த்த வேண்டும் என்று கூறிக்கொண்டு, இதற்கு அனைத்து வகையிலும், நம் அரசும் முதலமைச்சர் அவர்களும், என்றென்றும் மாணவர்களோடு துணை நிற்பார்கள் என்று கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, பிரபாகர்ராஜா, சென்னை மாநகரத் துணை மேயர் மகேஷ்குமார், உயர்கல்வித் துறை அரசு செயலாளர் சமயமூர்த்தி ஐ.ஏ.எஸ், கல்லூரி முதல்வர் ஜோதி வெங்கடேஷ்வரன், பேராசிரியர் உதயகுமார், கல்லூரிக் கல்வி ஆணையர் சுந்தரவள்ளி ஐ.ஏ.எஸ், பேராசிரியர் சொற்கோ, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மற்றும் குணசேகரன், பாலவாக்கம் மனோகரன், வேளச்சேரி பாஸ்கர், பெருங்குடி ரவிச்சந்திரன், பாலவாக்கம் சோமு, கண்ணன், மோகன், வெங்கடேசன், ராஜா, விநாயகமூர்த்தி, கிருஷ்ணகுமார், பிரகாஷ், சங்கர் கணேஷ், கொடி பாலா, தமிழ் மாணவ மன்ற நிர்வாகிகள், மாணவர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.